**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 268/2017**

Prosecution witness :

| | | | |
|---|---|---|---|
| Name: | இன்பப்பாண்டி | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Accused present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of** 1873 **on the day of** 11.12.2025

**முதல் விசாரணை**:

நான் தற்போது மதுரை மாநகர், கீரைத்துறை காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் உள்ளேன். நான் மதுரை, போதைப்பொருள் நுண்ணறிவுப்பிரிவில் கடந்த 2017ம் ஆண்டு பணிபுரிந்தபோது 27.02.2017அன்று சார்பு ஆய்வாளர் திரு.ஞானசேகரன் , சிறப்பு சார்பு ஆய்வாளர்-இசக்கி HC 660 ஆகியோருடன் நானும் சேர்ந்து சார்பு ஆய்வாளர் உத்தரவின் படி அவருக்கு கிடைத்த தகவலாளியுடன் கஞ்சா ரோந்துக்காக காவல் நிலையத்தில் இருந்து எடைபோடும் உபகரணங்களுடன் சுமார் 13.30 மணிக்கு திருமங்கலம் தாலுகா, கிண்ணிமங்கலம் அருகில் உள்ள மாவிலிபட்டி கிராமத்தில் எதிரியின் வீட்டின் முன்பு 14.15 மணிக்கு எங்களை தகவலாளி மறைவாக நிற்க வைத்து எதிரி வீட்டிலிருந்து வெள்ளை சாக்குப்பையுடன் வெளியே வந்துகொண்டிருந்தவரை எங்களிடம் தகவலாளி அடையாளம் காட்டிவிட்டு சென்றுவிட, வெளியிலிருந்து வந்த நபர் எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை நாங்கள் விரைந்து சென்று மடக்கி பிடித்து எங்களுடைய அடையாள அட்டையை காண்பித்தோம். நாங்கள் மதுரை, போதைப்பொருள் நுண்ணறிவுப்பிரிவை சேர்ந்தவர் என்றும், தாங்கள் கஞ்சா கடத்துவதாக வந்த தகவலின் அடிப்படையில் சோதனை செய்ய வந்துள்ளோம் என்று கூறினோம். அவர் பெயர் விலாசம் விசாரித்தபோது மாவிலிபட்டியை சேர்ந்த சுப்பையா தேவர் மகன்

ஆண்டி , வயது 54 என்று கூறினார். பின்னர் சார்பு ஆய்வாளர் எதிரி கொண்டுவந்த சாக்குப்பையை சோதனையிட வேண்டும் என கூறினார். எதிரியிடம் தாங்கள் விரும்பினால் கனம் குற்றவியல் நடுவரிடமோ அல்லது அரசிதழ் அனுமதி பெற்ற அதிகாரியிடமோ தாங்கள் சோதனையிட உரிமை உள்ளது என்று எடுத்துக்கூறியதற்கு அவ்வாறு செல்ல விருப்பமில்லை என்று எதிரி கூறினார். மேலும் பொதுநபர் சாட்சிகள் யாரும் அங்கு முன்வராததால் சார்பு ஆய்வாளர் என்னையும், தலைமைக்காவலர்-முருகேசன் என்பவரையும் சாட்சியாக நியமித்து அதே இடத்தில் சோதனை சம்மத கடிதம் தயார் செய்து நான் மற்றும் முருகேசன் இருவரும் கையெழுத்திட்டோம். அதில் எதிரி மற்றும் சார்பு ஆய்வாளர் கையொப்பம் செய்தார். எதிரிக்கு சோதனை சம்மத கடிதம் சார்பு செய்தார். மேலும் எதிரி தானே முன் வந்து எவ்வித அச்சுறுத்தலும் இன்றி தான் குடும்ப சூழ்நிலையின் காரணமாக ஆந்திராவிலிருந்து 5கிலோ கஞ்சா வாங்கி வந்து அதே வெள்ளை நிற சாக்குபையில் வைத்து தைத்து கீரிபட்டிக்கு விற்க செல்லும் வழியில் தாங்கள் பிடித்துக்கொண்டதாக தெரிவித்தார். சுமார் 15.00 மணிக்கு அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான், தலைமைக்காவலர்-முருகேசன் மற்றும் சார்பு ஆய்வாளர், எதிரி ஆகியோர் கையொப்பம் செய்தோம். சுமார் 15.45 மணிக்கு எதிரியானவர் கொண்டுவந்த சாக்குப்பையை சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்து அதிலிருந்த 5கிலோ கஞ்சாவை கொட்டி எடைபோட்டு, பகுப்பாய்விற்காக காக்கி நிற கவரில் தலா 50கிராம் வீதம் இரண்டு மாதிரி பொட்டலங்கள் எடுத்து அதை வெள்ளை நூலால் கட்டி, விபர சிலிப் ஒட்டி , NIB சீல் வைத்தோம். அந்த விபர சிலிப்பில் நான், முருகேசன், சார்பு ஆய்வாளர் மற்றும் எதிரி ஆகியோர் கையொப்பம் இட்டு, அதற்கு S1, S2 என்று குறியீடு வழங்கப்பட்டது. மீதம் உள்ள 4கிலோ 900 கிலோகிராம் கஞ்சாவை அதே வெள்ளை நிற சாக்குப்பையில் வைத்து நூலால் கட்டி, NIB சீல் வைத்து, விபர சிலிப்ஒட்டி அதில் நான், முருகேசன், சார்பு ஆய்வாளர் , எதிரி ஆகியோர் கையொப்பம் இட்டு அதற்கு P1என குறியீடு செய்தோம். பி பின்பு எதிரி அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சாவை வைத்திருந்து குற்றம் என சார்பு ஆய்வாளரால் எதிரியிடம் தெரிவித்து அதற்கு கைது அறிவிப்பு விபர சிலிப் வழங்கி அதில் நானும், தலைமைக்காவலர்-முருகேசன், சார்பு ஆய்வாளர் மற்றும் எதிரி ஆகியோர்

கையொப்பம் செய்து சுமார் 16.15 மணிக்கு அவருக்கு வழங்கி எதிரியை சார்பு ஆய்வாளர் கைது செய்து சுமார் 17.00 மணிக்கு நிலையம் கொண்டுவந்து மதுரை, போதைப்பொருள் நுண்ணறிவுப்பிரிவு குற்ற எண்.41/2017, ச/பி.8(c)r/w 20(b)(ii)(B) NDPS ACT ன் படி வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். பின்னர் காவல் ஆய்வாளர் விசாரிக்க நடந்த விபரத்தை கூறினேன். சோதனை சம்மத கடிதம் **அ.சா.ஆ.1** ஆகும்.

**குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.